**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1979 இன் 45 ஆம் இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவன அதிகாரச் சட்டம், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும நிறுவனம் தொடர்ந்நியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாக தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவனம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு கொள்கைகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 யூலை 18 ஆம் திகதிய 2341/19 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியின் பிரகாரம் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் உறுப்பினர்களான 105 உறுப்பினர்களிடமிருந்து 2023 ஆம் ஆண்டில் நிதிச் செயவாற்றல் கூற்றில் பெறப்பட்ட வருமானம் ரூபா 217,900 ஆக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வருமானங்களை அங்கீகரித்தல் தொடர்பான குறிப்பிட்ட கணக்கீட்டு கொள்கையொன்று நிதிக்கூற்றுக்களில் | நிறுவனம் அட்டுறு அடிப்படையை கருத்திற் கொண்டு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருந்ததடன் அவ்வாறு கணக்கீட்டுக் கொள்கையின் 2.1 இன் கீழ் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், உறுப்பினர்களின் கட்டணமும் அதே அடிப்படையில் செயல்படும் | அனைத்து வருமானங்களையும் அங்கீகரிப்பதற்கு குறிப்பிட்ட மற்றும் பொதுவான கணக்கீட்டுக் கொள்கையொன்று பயன்படுத்தி நிதிக்கூற்றுக்களில வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | என குறிப்பிடப்பட்டு சுட்டிக்காட்டப்பட்ட வெளிப்படுத்தல் தவறு திருத்தப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டில், மீள்மதிப்பீடு செய்யப்பட்ட 16 மர தளபாடங்கள் உபகரணங்கள் மீளாய்வாண்டில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அந்த மர உபகரணங்களுடன் தொடர்புடைய ரூபா 191,616 ஆன மீள்மதிப்பீட்டு இலாபம் மீள்மதிப்பீட்டு ஓதுக்கக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு திரண்ட நிதியக் கணக்கிற்கு மாற்றப்பட்டமையால் மீள்மதிப்பீட்டு ஓதுக்கம் ரூபா 191,616 ஆல் மிகைப்படுத்தப்பட்டு திரண்ட நிதியம் அதே பெறுமதியால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2013 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 191,616 ஆன மர தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் அகற்றப்பட்டதன் மூலம் மீள்மதிப்பீட்டு இலாபக் கணக்கிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட இலாப ஓதுக்கக் கணக்கிற்கு மாற்றுவதன் மூலம் குறைபாட்டை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீள்மதிப்பீட்டு இலாபம்/நட்டம் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 யூலை 27 இல் ரூபா 644,905 கொண்டு செல்லும் பெறுமதியுடன் பகவந்தலாவ பயிற்சி மையத்தின் வேலி ரூபா 282,500 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டமையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட வேண்டிய ரூபா 362,405 ஆன மீள்மதிப்பீட்டு நட்டம் மீள்மதிப்பீட்டு ஓதுக்கக் கணக்கில் ரூபா 482,500 ஆக அங்கீகரிக்கப்பட்டமையால் மீள்மதிப்பீட்டு நட்டம் ரூபா 120,095 ஆல் மிகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வேலிக்காக 2023 சனவரி 01 முதல் 2023 யூலை 27 வரையான காலப்பகுதிக்கான ரூபா 43,595 ஆன தேய்மானப் பெறுமதியும் கணக்கீடு செய்யப்படடிருக்கவில்லை. | பக்வந்தலாவ பயிற்சி நிலையத்தின் பாதுகாப்பிற்காக கட்டப்பட்ட வேலி 2023.07.27 அன்று ரூபா 282,500 ஆக மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்டிருந்த அங்கீகரிக்கப்பட மீள்மதிப்பீட்டு நட்டம் ரூபா 362,405 ஆக தொடர்புடைய கணக்கு திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீள்மதிப்பீட்டு இலாபம்/நட்டம் மற்றும் தேய்மானம் ஆகியவை சரியாக சீராக்கம் கணக்கிடப்பட வேண்டும் |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் இனங் காணப்படாத செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 842,450 ஆன நடைமுறைப் பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படாத வருமானங்களாக கணக்கீடு செய்யப்படாமல் நடைமுறைச் சொத்துக்களிலிருந்து | இனங் காணப்படாத கணக்கு மீதி ரூபா 842,450 உள்ளன. இந்த மாணவர்களின் வைப்புத் தகவல்கள் அவ்வப்போது கணக்குப் பிரிவிற்கு வழங்கப்படுவதுடன் | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது அனைத்து வருமானங்களும் அடையாளம் காணப்பட வேண்டும் மற்றும் அங்கீகரிக்கப்படாத |

| | | | |
|---|---|---|---|
| | குறைத்துக் காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அவ்வாறு வழங்கப்பட்ட பிறகு, அந்தத் தொகைக்கு ஒதுக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் பூர்த்தி செய்யப்பட்டு கடன்பட்டோர் மீதியில் இருந்து கழிக்கப்படும். இந்த மாணவர்கள் தங்கள் சான்றிதழ்களைப் பெறும்போது இந்தத் தகவலைச் சமர்ப்பிப்பதால் அச் சந்தர்ப்பத்தில் இந்த வைப்புகளில் பல அந்த நேரத்தில் அடையாளம் காணப்படக்கூடியதாக இருக்கும். | வருமானங்கள் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 4 இருப்பு விடயங்கள் இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 2,140,025 ஆகவும், அன்றைய திகதியில் இருப்பு பரிசோதனை அறிக்கைகளின்படி, பெறுமதி ரூபா 2,200,598 ஆகவும் இருந்தமையால் இருப்பு மீதி ரூபா 60,573 ஆல் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இருப்பு பரிசோதனை அறிக்கைகளின்படி, உள்ளிடப்பட வேண்டிய மீதிகள் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டு இக்குறைபாடு சரி செய்யப்படும். | இருப்பு சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |
| (உ) | விடுதி நீர்க்குழாய் அமைப்பு மற்றும் கழிவுநீர் அமைப்புகளை மறுசீரமைப்பதற்காக 2022 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,477,185 இல் ரூபா 624,131 ஆனது 2023 சனவரி 10 இல் தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்தப்படடிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,477,185 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தமையால் பொறுப்புக்கள் ரூபா 624,131 ஆல் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | விடுதியின் நீர்க்குழாய் அமைப்பு மற்றும் கழிவுநீர் அமைப்புகளை மறுசீரமைப்பதற்காக 2022/12/31 இல் செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,477,185 இல் ரூபா 624,131 கழிவுநீர் அமைப்பு சீரமைப்பு தொடர்பான ஏகத்துவ அதிகாரம் கொண்ட இகோ இன்ஜினியர்ஸ் Eco Engineer's நிறுவனத்திற்கு 2023.01.10 அன்று செலுத்தப்பட்டமையால் 2023/12/31 இல் மிகைப்படுத்தப்பட்ட ரூபா 624,131 ஆன கடன்கொடுத்தோர் மீதி குறைக்கப்பட்டு ஏற்பட்ட தவறு சரி செய்யப்படும். | செலுத்த வேண்டிய மீதி சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறைச் சொத்துகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 31,947,618 ஆன வர்த்தக பெற வேண்டிய மீதியில் 4 ஆண்டுகளுக்கு மேலான ரூபா 202,575 ஆன மீதியை அறவிடுவதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதி நிலைமைக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 31,947,617 கடன்பட்டோர் நிலுவைகளில் இதுவரை 80% இற்கும் அதிகமான தொகை அறவிடப்பட்டுள்ளது. இந்தக் கடன்பட்டோரில் முதன்மைக் கடனாளியாக இருக்கும் கல்வி அமைச்சிலிருந்து 13 வருட தொடர் கல்வித் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பெறப்பட வேண்டிய தொகை ரூபா 13,407,457 ஆகும். அத்தொகை யிலிருந்து ரூபா 10,539,200 அறவிடப்பட்டு மீதமுள்ள தொகையை அறவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 399,850 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய அண்டிற்கான மிகை ரூபா 8,548,607 ஆகும். அதற்கு இணங்க நிதி விளைவுகளில் ரூபா 8,148,757 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் சம்பளம், ஊதியம் மற்றும் ஊழியர் நலன்கள் , வழங்கல்கள் மற்றும் நுகர்பொருட்கள், பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு , தொடர்பாடல் மற்றும் பயன்பாட்டுச் சேவைகள், இயலளவு அபிவிருத்தியுடனான பயிற்சி செலவு, வசதிகளை வாடகைக்கு வழங்குதல் , பொகவந்தலாவ பிரதேச நிலையச் செலவு, தேய்மானச் செலவு ஏனைய செலவுகள் என்பன முறையே ரூபா 5,917,344, ரூபா 1,354,217, ரூபா 498,552, ரூபா 6,656,605, ரூபா 20,459,960, ரூபா 4,291,449, ரூபா 510,861, ரூபா 3,222,318, ரூபா 938,420 ஆல் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு தாக்கமளித்திருந்தது.

### 2.2 முக்கிய வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப்பகுப்பாய்வு

| விடயம் | 2023 ஆண்டு ரூபா | 2022 ஆண்டு ரூபா | முரண்கள் ரூபா | முரண்கள் சதவீதமாக |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| திறைசேரி மீண்டெழும் பெறுவனவு | 69,394,000 | 64,000,000 | 5,394,000 | 8.4 |
| திறைசேரி மூலதனப் பெறுவனவு | 18,600,000 | 16,000,000 | 2,600,000 | 16.25 |
| ஈட்டப்பட்ட பயிற்சி வருமானம் | 67,439,737 | 38,328,586 | 29,111,151 | 76 |

| | | | | |
|---|---|---|---|---|
| விடுதி வசதிகள் வாடகை | 31,534,472 | 22,556,426 | 8,978,046 | 39.8 |
| வட்டி வருமானம | 4,920,085 | 14,823,936 | 9,903,851 | 66.8 |
| **செலவுகள்** | | | | |
| சம்பளம் வேதனம் மற்றும் ஊழியர் நலன்கள் | 52,410,266 | 46,492,922 | 5,917,344 | 12.7 |
| வழங்கல்கள் | 10,734,865 | 9,380,648 | 1,354,217 | 14 |
| பயிற்சி செலவினங்கள் | 42,699,706 | 22,239,746 | 20,459,960 | 92 |
| ஏனைய செலவினங்கள் | 2,176,251 | 1,237,831 | 938,420 | 76 |
| பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு | 10,380,087 | 9,881,536 | 498,551 | 5 |
| தொடர்பாடல் மற்றும் பயன்பாட்டுச் செலவினங்கள் | 19,818,051 | 13,161,446 | 6,656,605 | 50 |
| வசதிகள் வாடகை செலவினங்கள் | 15,946,300 | 11,654,851 | 4,291,449 | 37 |
| பகவந்தலாவ பிரதேச நிலையச் செலவினங்கள் | 909,762 | 398,901 | 510,861 | 128 |
| பெறுமானத் தேய்வு | 38,495,519 | 35,273,201 | 3,222,318 | 9 |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை மற்றும் விரைவு சொத்து விகிதங்கள் முறையே 1.46 : 1 மற்றும் 1.07 : 1 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் விகிதங்கள் முறையே 3.72 : 1 மற்றும் 3.23 : 1 ஆகவும் இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் நூலக நிர்வாகத்தை தானியக்கமாக்குவதற்கு ரூபா 248,000 செலவில் 2020 ஆம் ஆண்டில் மென்பொருள் அமைப்பொன்று (KOHA) நிறுவப்படடிருந்த போதிலும் மென்பொருள் அமைப்பின் முழுமையான செயல்பாட்டிற்கு தேவையான வன்பொருள் பற்றாக்குறை மற்றும் மின்வெட்டு நேரங்களில் மென்பொருள் அமைப்பை செயற்படுத்துவதற்கு இயலாமை ஆகிய காரணங்களால் 2020 யூன் 19 முதல் கணக்காண்வுத் திகதியான 2024 மே 27 வரை மென்பொருள் அமைப்பு விளைவற்றதாக காணப்பட்டது. | மென்பொருளில் நூலகத்தின் செயற்பாடுகளான நிகழ்நிலை அட்டவணைப்படுத்தல், நிகழ்நிலை மீட்டெடுப்பு, நிகழ்நிலை தொகுதி எடிட்டிங், நிகழ்நிலை பருவ இதழ் எடிட்டிங் மற்றும் நூலகத்தின் அடிப்படை நிர்வாக பணிகள் நூலக தகவல்களை அறிவியல் மற்றும் முறையாக செயற்படுத்துவதாகும். ஆனால் அந்த மென்பொருளின் முழு செயல்முறையையும் வெற்றிகரமாக செய்வதற்கு பல தொழில்நுட்ப தடைகள் இருந்தன. அதாவது, மின் தடையின் போது | நூலக முகாமைத்துவ தகவல் அமைப்பிற்குத் தேவையான ஏனைய வன்பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு மற்றும் தேவையான மனித வளங்களைப் பயன்படுத்தி எதிபார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மென்பொருள் அமைப்பை இயக்க முடியாமை, பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து எமது நிறுவனத்திற்கு திறைசேரி வழங்கிய குறைந்தளவு பணம் காரணமாக இந்த அமைப்பின் உத்தரவாதக் காலம் மீறப்பட்டுள்ளதால் மென்பொருள் அமைப்பின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல் , நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்கு நிரந்தர அதிகாரியொருவர் இல்லாமையும் இதற்கான முக்கிய காரணங்களாக இருந்தன. | |
| (ஆ) | நிறுவனத்தின் நூலகத்தில் நடாத்தப்பட்ட சுயாதீன பரிசோதனையின்போது விற்பனைக்காக 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் அச்சிடப்பட்ட ரூபா 828,550 மதிப்பிலான 5,875 கையேடுகளில் 2023 ஆம் ஆண்டில் 64 புத்தகங்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 வரை 20 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ரூபா 810,325 ஆன 5,811 கையேடுகள் நூலகத்தின் களஞ்சியசாலையில் சேமிக்கப்பட்டிருந்தன. | புத்தகங்களில், அதிகமாக கோரப்பட்ட 3 புத்தகங்களை அடையாளம் காண முடிந்தது. அவை, தேயிலை உற்பத்தியில் தொழில்நுட்ப செயல்முறை, தேயிலை தொழிற்சாலை அதிகாரிகளின் திறன் பட்டறை, Engineering aspect of tea processing ஆகிய 3 புத்தகங்களுக்கு மட்டுமே அதிக தேவை காணப்பட்டதுடன் ஏனைய புத்தகங்களுக்கான தேவை குறைவாக உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். எனினும், மாணவர்களின் தேவைக்காக பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி தொடர்பான அத்தியாவசிய புத்தகங்களை கொள்வனவு செய்யும் வசதி இந்த நூலகத்தில் உள்ளது. | தேவையை சரியாகக் கண்டறிந்து, புத்தகங்களை அச்சிடவும், அச்சிடப்பட்ட புத்தகங்களின் இருப்பைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிறுவனத்தால் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக் ஒப்பந்தம் இல்லாமல் வாடகைக்கு எடுக்கப்பட்ட 2 வீடுகளுக்கு முன்னுதாரணம் கொண்ட கடிதங்கள் மூலம் பணிப்பாளரினால் அவ்வப்போது மாதாந்த வாடகையை அதிகரிப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டு 2023 ஆம் ஆண்டில் ரூபா 2,116,000 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், கையொப்பமிடப்படாத குத்தகை ஒப்பந்தங்கள் மூலம் 4 வீடுகளுக்கு மீளாய்வாண்டில் ரூபா 640,000 ஆன வாடகையும் நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன், ஒரே நேரத்தில் சுமார் 80 பயிற்சியாளர்களுக்கு (40x2) தங்குமிட வசதியை வழங்கக்கூடிய வகையில் இரண்டு வீடுகளை வாடகை அடிப்படையில் பெறுவதற்கு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.முறையான குத்தகை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு கணககாய்வுப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படும் | முழு வாடகைக் காலத்திற்கும் முறையாக ஒப்பந்தம் செய்யப்பட்டு பணம் செலுத்தப்பட வேண்டியதுடன் அனைத்து திருத்தங்களும் ஒப்பந்தத்தின் பிரகாரம் முறையான அங்கீகாரத்துடன் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் பதவியணி அங்கத்தவர்கள் ஓய்வு பெறுகையில் வழங்குவதற்காக 22 கரட் தங்கப் பவுணிலான 13.5 கிராம்கள் கொண்ட 10 தங்க நாணயங்கள் 2019 மே 30 ஆந் திகதி ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து ரூபா 851,800 தொகைக்கு கொள்வனவு செய்து செலவாக பதிவழிக்கப்பட்டிருந்தது. நிறுவனரீதியான மற்றும் நிதி ரீதியான காரணங்களின் அடிப்படையில் இந்த தங்க நாணயங்கள் பகிர்ந்தளிக்கப்படாது 3 ஆண்டுகள் காலமாக நிறுவனத்தின் பாதுகாப்பு பெட்டியில் வைக்கப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியிலும் 10 தங்க நாணயங்கள் இருந்த போதிலும் அந்த தங்க நாணயங்கள் 22 கரட் பவுண் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தங்கத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 851,800 செலவொன்றாக பதிவளிக்கப்பட்டமை 2023 ஆம் ஆண்டிற்கான கணக்கு அறிக்கைகளில் திருத்தப்பட்டுள்ளது. இத்தங்கத்தின் மதிப்பு மற்றும் கலவையை பரிசோதிப்பதற்காக இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் நோக்கங்கள் தொடர்பான செலவுகள் மட்டுமே செய்யப்பட வேண்டியதுடன் இந்த தங்க நாணயங்களின் சரியான பெறுமதியை மதிப்பிட்டு கணக்கிடப்பட வேண்டும். மேலும், இந்த இருப்பு முறையான அங்கீகாரத்தின் பேரில் அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டில், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் 100 திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,359,236 செலவில் 52 வேலைத்திட்டங்கள் மட்டுமே நடாத்தப்படடிருந்ததுடன். அந்த 52 திட்டங்களில் 2,610 பேர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 1,381 பயனாளிகள் அல்லது எதிர்பார்த்த எண்ணிக்கையில் 53 சதவீதம் பேர் மட்டுமே கலந்து கொண்டனர். மேலும், இந்த நிகழ்ச்சிகளை ஆண்டு முழுவதும் நடாத்துவதற்கு செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் சனவரி, பெப்ரவரி, ஒக்டோபர், நவம்பர், திசெம்பர் மாதங்களில் மட்டும் நிகழ்ச்சிகள் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டு, மீதமுள்ள 07 மாதங்களில் இந்த நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தினால் சிறிய தோட்ட உரிமையாளர்களுக்காக 100 திறன் அபிவிருத்தி திட்டமிடப்பட்டு அதற்காக ரூபா 5.00 மில்லியன் தொகையொன்று ஒதுக்கப்படடிருந்தது. இருப்பினும், 2023 ஆம் ஆண்டில், நிறுவனம் 52 நிகழ்ச்சிகளை மட்டுமே நடாத்த முடிந்தது. அதில் பங்கேற்ற நில உரிமையாளர்களின் எண்ணிக்கை 1,371 அல்ல, 1,381 ஆகும். 3 வேலைத்திட்டங்கள் காலை மற்றும் மாலை நடாத்துவதில் மாற்றம் ஏற்படடமையால், 2023 முன்னேற்ற அறிக்கை மற்றும் ஆண்டறிக்கையில் உள்ள மதிப்புகளை சரிசெயவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.நிதி நெருக்கடி காரணமாக இந்த நிகழ்ச்சிகளை நடாத்த திறைசேரியிலிருந்து ஒதுக்கீடுகள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், திட்டமிட்டபடி இந்த நிகழ்ச்சிகளை நடாத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. | நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்கு முறையான ஆய்வுக்குப் பின்னர் திட்டங்களைத் தயாரித்து அந்தத் திட்டங்களை திறம்பட நடைமுறைப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிறுவனத்தினால் தேயிலை ஆராய்ச்சி மற்றும் தோட்ட முகாமைத்துவ டிப்ளோமாக்களுக்காக 02 சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்க்களை நடாத்தப்பட்டு ரூபா 6.07 மில்லியன் வருமானமொன்று ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தினால் அக்கற்கைநெறிகள் நடாத்தப்படாமையால் எதிர்பார்த்த வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் 02 தொழில்நுட்ப நிகழ்ச்சித் | சர்வதேச நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலம் நிறுவனத்தின் அங்கீகாரத்தை அதிகரிக்க முடிவதுடன் அதிக வருமானத்தை ஈட்டுவதற்கும் முடியுமென்பதால் மீளாய்வாண்டில் தேயிலை சுவைத்தல் மற்றும் தோட்ட முகாமைத்துவம் தொடர்பான 2 டிப்ளோமா பாடநெறிகள் | நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்கு முறையான ஆய்வுக்குப் பின்னர் திட்டங்களைத் தயாரித்து அந்தத் திட்டங்களை திறம்பட நடைமுறைப்படுத்தல் வேண்டும். |

திட்டங்கள், 4 திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றுடன் 02 கல்வித் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு முறையே ரூபா 1.17 மில்லியன், ரூபா 1.88 மில்லியன் மற்றும் ரூபா 36.32 மில்லியன் ஈட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் நிறுவனத்திற்கு அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் முறையே ரூபா 0.56 மில்லியன், ரூபா 1.28 மில்லியன் மற்றும் ரூபா 30.86 மில்லியன மடடுமே ஈட்டக்கூடியதாகவிருந்தது.

உருவாக்கப்பட்டன, இந்தக் கற்கைநெறிகள் குறித்து விளம்பரம் செய்யப்பட்ட போதிலும் இதற்கான விண்ணப்பங்கள் பெறப்படவில்லை. மீளாய்வாண்டில் 2 தொழில்நுட்ப அபிவிருத்திகள் திட்டமிடப்பட்டிருந்தாலும், தேயிலை சுவைத்தல் பற்றிய நிகழ்ச்சித் திட்டத்தினை மட்டுமே செயற்படுத்த முடிந்தது. திட்டமிடப்பட்ட நான்கு திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் தோட்டக் கள அலுவலர் மற்றும் தேயிலை தொழிற்சாலை அலுவலர் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.